விலை 20/-

"ஆய கலைகளில் ஆற்றல் பெருக
'கண்மணி' கரம் தருவாள் !"

# கண்மணி

கண் 3 பங்குனி 2009 மணி : 10



## 'கண்மணியின்' கண்மணிகளுக்கு....!



இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர்........ நான் மூன்றாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது எனக்குக் கற்பித்த ஆசிரியை "நீ யாராக வர விரும்புகிறாய்?" என்று என்னிடம் கேட்டார். சக மாணவர்களிடமும் கேட்டார். அதை நான் இன்று வரை மறக்கவில்லை. அதற்குக் காரணம் அந்தக் கேள்வி மட்டுமல்ல. அதன் பின் அக்கேள்வியை யாரும் என்னிடம் கேட்கவில்லை. எனக்கும் அத்தகைய நோக்கு இல்லாமல் போய்விட்டது. எமது கல்விச்சாலைகள் தகவல்களை மட்டும் தந்தால் போதாது. தன்னம்பிக்கையையும் தர வேண்டும். எதிர்காலக் கனவுகளையும் தர வேண்டும்.

எல்லோரும் வைத்தியர்களாக முடியுமா?. எல்லோரும் பொறியியலாளர்களாக முடியுமா?. எமது ஆற்றல்களை அறிவோம். புதிய பாதையில் பயணிப்போம். வெற்றிச் சிகரத்தைத் தொடுவோம்.

**இரா.ஜெயக்குமார், பிரதம ஆசிரியர், 'கண்மணி'**


**ஆசிரியர்**
இரா.ஜெயக்குமார்
(B.A, Dip in Education)
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**ஆலோசகர் குழு**
**பா.தனபாலன்,**
(M.Phil in Education)
(நிபுணத்துவ ஆலோசகர், கல்வி வழிகாட்டல் ஆலோசனை நிலையம், யாழ்ப்பாணம்

**ம.பார்வதிநாதசிவம்,**
புலவர்

சிவத்தமிழ் வித்தகர்
**சிவமகாலிங்கம்**
(B.A, Dip in Edu., SLEAS)

**கவிமணி க. ஆனந்தராஜா**
(ஓய்வு பெற்ற அதிபர்)

**கணினி வடிவமைப்பு**
சி.ரங்காதரன்


## சேமிக்க என்ன வழி?.

"திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்பது தமிழர் வாழ்விற் பயிலும் பழமொழிகளில் ஒன்று.

பொருளில்லாவிடில் இவ்வுலக வாழ்வினை மகிழ்வாக நடத்த முடியாமற் போவதுண்டு. அதுவும் இளமையில் வறுமை வரின் மிகக்கொடூரமே. கல்வி பயில, உண்ண, உடுக்க, பூண முடியாமல் துன்புற வேண்டிவரும். ஆதலால் பொருளீட்டல் முக்கியமானது. பொருளீட்டுவதில் எவ்வளவு கவனஞ் செய்கிறோமோ அவ்வளவுக்கு அதனைச் செலவு செய்திலும் கவனம் காட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு, ஏன் செலவாகிறது என்ற கணக்கு மிகவும் அவசியமானது. தினமும் கணக்கெழுதுதல் நல்லதொரு பழக்கமே! மாறாக, வருவது முழுவதும் போவதாக இருத்தலாகாது. வருமானத்தில் ஒரு பகுதியை எவ்வாறாயினும் மீதம் பண்ணி வங்கியிலிடுகின்ற வழக்கத்தைப் பழக்கப்படுத்தல் மிக முக்கியமானது.

முதுமையிலோ, நோய்பிணிக்காலத்திலோ, எதிர்பாராமல் நிகழும் துன்பகாலங்களிலோ இத்தகைய வைப்பே கைகொடுக்கிறது. "எய்ப்பில் வைப்பு" என்பது இதற்குப் பெயர்.

இப்பிறவியில் வங்கி வைப்பு உதவுவதாகலாம். தேகம் ஒழிந்த பின் உயிரின் யாத்திரையில் உதவக்கூடிய வைப்பு நிதி முறையும் ஒன்று உண்டு. அஃது என்னென்று வள்ளுவப் பெருந்தகை அழகுறப் பேசுகிறார்.

"அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன்
பெற்றாற் பொருள்வைப் புழி"

என்பதது.

பொருளற்று - மானத்தை மறந்து - கைநீட்டி யிரந்து திரியும் ஏழைகளின் வயிற்றுக்கு உணவாக எமது பணத்தை வடிவம் மாற்றி வைப்பிடலாம். அவ்வைப்பு மறுபிறவிக்கும் கைகொடுக்கும்.
தன்நிழல் தனக்கு வெய்யிற் கொதுங்க உதவாது. அது போலவே மறு பிறவிக்கு இப்பிறவிப் பொருளும் உதவாது.



"நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள் நுட்கட்கு இங்ஙன் வெயிற் கொதுங்கவுதவா வெறுநிழல் போற் கையிற் பொருளுமுதவாது"
(நொய்யில் - குறுணியரிசி)
- என்கிறார் அருணகிரியார்.

இப்பிறவியில் வாய்த்த பொருள் இரப்பவர்க்கு ஈயவென்று இறைதந்தது. இதனை மூலதனமாகக் கொண்டு சிவப்பயிர் வளர்த்து முத்திக்கனி பெறலாமென்பதோர் இரகசியமுண்டு. "சிவோ தாதா சிவோ போக்தா" என்ற சிவாகம வசனப்படி "எல்லாம் சிவன் தந்தது - சிவனே ஏற்பவர்" என்ற மனப்பக்குவம் யார்க்கு வாய்க்கிறதோ, அவர் சிவஞானியாகிறார். "நமச்சிவாய" என்ற திருமந்திரத்தை இருந்தாலும் நின்றாலும், துயின்றாலும், விழித்தாலும், உண்டாலும், உடுத்தாலும் மறவாமல் வாழ்வானது வாழ்வு மண்ணிலே சிவலோகத்தரமுடையதாம். அவனுக்கு தேகாந்தத்தும் சிவலோகப்பதவி எளிதாகிறது.

"வைச்ச பொருள் நமக்காதுமென் றெண்ணி நமச்சிவாய
அச்சமொழிந்தேன்" - என்கிறார் நாவினுக்கு அரசர்.

சைவப் புலவர் ஏ.அனுசாந்தன்,
ஆசிரியர், யா/ யூனியன் கல்லூரி.

## பரவசம் தரும் பழமொழிகள்

- அவளைத் தொடுவானேன்? அவலப் படுவானேன்?.
- அறுதலி வாழ்க்கைக்கு அறுபத்தெட்டு இடைஞ்சல்
- இளைத்தவன் பெண்டாட்டி எல்லாருக்கும் வைப்பாட்டி.
- எல்லோரும் ஓடிக் களைத்த குதிரையில் சக்கடத்தாரோடிச் சறுக்கி விழுந்தாராம்.
- களவுக்கு வந்தவன் இழவுக்கு நில்லான்.
- தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்
- தான் தின்னி பிள்ளை வளரான், தவிடு தின்னி மாடு வளரான்.
- செத்தவன் பெண்டிலைக் கட்டினாலும் விட்டவன் பெண்டிலைக் கட்டாதை.
- மலைவிழுங்கி மாதேவனுக்கு கதவு ஒரு அப்பளம்.
- அக்கா உள்ளவரைதான் அத்தான் உறவு.

மேகதூதன்

## மாணவனே நீ விழித்தெழு!

மண்ணுலகில் விஞ்சுபுகழ்
எஞ்சிடவே எண்ணிவிடு!
பஞ்சி என்னும் பண்பினையே
பக்குவமாய் தள்ளிடு!
நஞ்சு எனக் கல்விதனை
பிஞ்சு நீயும் நினைத்திடாதே.
எஞ்சி நிற்கும் ஏழ் பிறப்பும் - அது
தஞ்சம் என வந்து நிற்கும்
நல்ல குரு நல்கும் கல்வி
நலமதையே தந்துவிடும்!
நல்ல நண்பர் கூட்டோடு
சென்று நிதம் கற்றுவிடு!
பருவம் அது தப்பிவிட்டால்
கல்விப்பயிர் அழிந்து விடும்
பண்பு நிறை மாணவனே
இன்றே நீ விழித்து எழு!

புதுயுகன், குப்பிளான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இலக்கியம் என்றால் என்ன?

தமிழ் இலக்கிய வகைகளில் ஒன்றாகக் குழந்தை இலக்கியம் விளங்குகிறது. குழந்தைகள், மழலைகள், பிள்ளைகள், சிறுவர்கள் என்ற பெயர்களைச் சார்ந்து இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. பிறப்பிலிருந்து 12 வயது வரையுள்ளவர்கள் இப்பருவத்தினராவர். இப்பினும் ஒவ்வொரு தரத்தினரது வயதும் வேறுபட்டது. இரண்டு வயது வரையுள்ளவர்களைக் குழந்தைகள் என்னும் போது, 12 வயது வரையுள்ளவர்கள் பிள்ளைகள் எனப்படுகின்றனர். உளவியலாளரிடையே இது சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் உள்ளன. இதனால் சில படைப்பாளிகள் தமது படைப்புக்களை, இத்தனை வயதுக்கிடைப்பட்டவர்களுக்கானவை எனக்குறிப்பிடுவதும் உண்டு. எப்படியிருந்த போதிலும் குழந்தைகள் அல்லது சிறுவர்கள் தாமாகவே படித்தும், பழகியும் இன்புறத்தக்கதாகக் குழந்தை இலக்கியங்கள் அமைதல் வேண்டும். 20 ஆம் நூற்றாண்டில் புதிய இலக்கியத்துறையாக வளர்ச்சி கண்டு வரும் குழந்தை இலக்கியம் தமிழுக்குப் புதியதன்று. அதற்குரிய பண்புகள் தொன்மையான தமிழ்நூல்களில் காணக்கிடக்கின்றன. தொல்காப்பியனூலில் 'பிசிம்' என்ற பொருளில் விடுகதைகள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. குழந்தைகளுக்கான பாடல்கள், கதைகள், துணுக்குகள், விடுகதைகள், நாடகங்கள், கார்ட்டூன்கள், திரைப்படங்கள் போன்ற பலவும் குழந்தை இலக்கிய வகைகளுள் அடங்குவன. குழந்தைகள் விரும்புகின்ற பொருட்கள், நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், காட்சிகள், அனுபவங்கள் பற்றியதாகவும், அவர்களது அறிவுக்கும் வயதுக்கும் பொருந்தியதாகவும், அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகவும் அவர்களது சிந்தனையை விரிவாக்கம் செய்யக்கூடியதாகவும், விழுமியப் பண்புகளை வளர்க்கக்கூடியதாகவும் குழந்தை இலக்கியங்கள் அமைதல் வேண்டும். எதிர்மறையாகவன்றியும், நேர்நிலையாகவும், பிரசாரத்தன்மையற்றும் கருத்துக்கள் சொல்லப்படுதல் வேண்டும். 'பொய் சொல்லக்கூடாது' என்பதை விலக்கி உண்மை பேசு என்பதை வலியுறுத்தல் வேண்டும். தீய செயல்கள் பற்றிக்கூறாது, நல்ல செயல்கள் பற்றிக்கூறி ஊக்குவித்தல் வேண்டும்.



குழந்தை இலக்கியத்தில் தலை சிறந்த நூலாக குழந்தைப் பாடல்கள் காணப்படுகின்றன. எவரையும் எளிதில் ஈர்க்கக்கூடிய பாடல்கள், சந்தம் நிறைந்தனவாக இருத்தல் வேண்டும். புரியாத சொற்களை விலக்கி எளிமையான சொற்களைக் கொண்டு பாடல்கள் புனைதல் வேண்டும். வீட்டிலும் வெளியிலும் பேசுகின்ற அன்றாட பாவனைக்குரிய சொற்களைத் துணையாகக் கொள்ளல் அவசியம். குழந்தை படிக்கும் போது இடருறாவண்ணம் நீண்ட சொற்றொடர்களைப் பேணாது சிறிய சிறிய சொற்றொடர்கள் பாடல் வரிகளாக அமைதல் வேண்டும். குழந்தைகளின் புலன்களை எளிதில் ஈர்க்கக்கூடியதாக ஓசை ஒழுங்கு, சிறிய சொற்கள், சிறிய சொற்றொடர்கள் மீண்டும் மீண்டும் சில சொற்கள் வருதல், எளிமையான சொற்களாயிருத்தல், குழந்தைகளுக்கு விருப்பமான செய்திகளைப் பாடு பொருள்களாகக்கொள்ளல், பெரிய பாடலாக அமையாதிருத்தல் முதலான பண்புகளுடன் குழந்தைப் பாடல்கள் இயற்றி அளிக்கப்படுமானால், அவை வெற்றிபெறும். சொசசைச சொற்களையோ, பிறமொழிச்சொற்களையோ சேர்ப்பதனூல் உளவியல் ரீதியான தாக்கம் குழந்தைகள் மனதில் ஏற்படக்கூடும். குழந்தைகளின் உளக்கொள்ளளவுக்கு ஏற்றதான செய்திகளே பாடல்களில் சொல்லப்படுதல் வேண்டும். வர்ணனைகள் அதிகமாய் வருவதோ, ஒரே வர்ணனை அடிக்கடி வருவதோ கூடாது. குழந்தைகளுக்காகப் பாடலையோ அல்லது எந்த இலக்கிய வடிவத்தையோ எழுதினாலும் படைத்தாலும் அவை அவர்களுக்குப் பொருந்துவதாய் இருத்தல் வேண்டும்.

குழந்தைப் பாடல்களுள் பொருளிலிப் பாடல்கள் (சந்தமும் ஓசையும் முக்கியம் பெறுதல்) விளையாட்டுப் பாடல்கள், வினா - விடைப் பாடல்கள், கதைப்பாடல்கள், விடுகதைப்பாடல்கள், நீதிப்பாடல்கள், நகைச்சுவைப்பாடல்கள், வரலாற்றுப்பாடல்கள், அறிவியற் பாடல்கள் எனப் பல்வகையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடகடா கடகடா வண்டி வருகுது
காளை மாடு இரண்டு பூட்டி வண்டி வருகுது
டக்டக் டக்டக் வண்டி வருகுது
தாவித்தாவி ஓடும் குதிரை வண்டி வருகுது"

இது ஒரு பொருளிலிக்குழந்தைப் பாடலாகும். ஓசையும் சந்தமும் இங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

"காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா !
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா!"

இது தாயன்பை எடுத்துக்காட்டும் இனிய பாடலாகும். காலவெள்ளத்தைக் கடந்து நின்று வாழுகின்ற குழந்தைப் பாடல்கள் தமிழ்மொழியில் பலவுள. கவிமணியின் "பச்சைக்கிளியே வா வா வா!", "தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு", பாரதியாரின் "ஓடிவிளையாடு பாப்பா" , பாரதிதாசனின் "தலைவாரிப் பூச்சூடி", வேந்தனாரின் "காலைத்தூக்கிக் கண்ணிலொற்றி", சுத்தானந்த பாரதியாரின் "அம்மா நான் விளையாடப்போறேன்", அல்வாயூர் செல்லையாவின் "அம்மா வெளியே வா அம்மா", அடி வள்ளியப்பாவின் "கண்ணன் எங்கள் கண்ணனாம்". முதலானவை சில உதாரணங்கள். எனவே குழந்தைப் பாடல்கள் மூலம் குழந்தைக் கவிஞர்கள் தமிழுக்கு பெருமை சேர்க்க வேண்டும். உண்மையில் அவை குழந்தைக் கவிதைகளாக அமைவதில் தான் அந்தப் பெருமை தங்கியுள்ளது

திரு.செ.திருஞாவுக்கரசு

## தரணியில் தலைமகனாகு!



திரி திரி திரியென்று திரிந்து
படி படி படியென்று படித்து
G.C.E (O/L) ல் ஆல் எவ் எடுத்தபின்
இறைவனை வேண்டுதல் செய்வார்.

காலையும் மாலையும் ரியூசன்
இரவினில் எப்பவும் ரிவிசன்
றோட்டினில் இருவராய் செல்வதும் பாஷன்
மாணவர் நிலையினைப் பாரீர் !

ரியூசனில் வாத்தியார் சொன்ன
பகிடியை றோட்டினில் சொல்லி
கருப்பொருளை மறந்து புறப்பொருளை எடுக்கும்
பேதமை நிலையினைப் பாரீர்!

காற்றிடும் வேளையில் கவனம்
வெற்றியில் என்றுமே தவனம்
பற்றுடன் பாடத்தை உற்றியே நோக்கி நீ
மற்றதை மறந்திடு மகனே!

குருவின்மேல் பக்தி வை மகனே
திருவருள்தேடி நில் தினமே
தருகின்ற பயிற்சிகள் தவறாது செய்து நில்
தரணியில் தலைமகன் ஆவாய்!

கவிமணி அன்னைதாஸன், உரும்பிராய்

## கடலன்னையின் சீற்றம்?

கடலன்னையே !
பூனையைப் போல் பதுங்கியிருந்த நீ
புலியைப் போல் பாய்ந்ததன் காரணம் என்னே?

பொறுமையின் சிகரமே நீயா பொங்கியெழுந்தாய்?
பொங்கி எழுந்து உன் பசியையும் தீர்த்துக்கொண்டாய்!

புன்னகை முக மழலைகள், ஆடவர், மகளிர் பாகுபாடின்றி
அனைவரையும் உன்பசிக்கு உணவாக்கினாய்!

கரையெங்கும் அவல ஓலம்
பூமியெங்கும் கண்ணீர் மழை

முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மானிடர் இறந்தனரே
நூற்றெண்பத்திரண்டு பாடசாலைகள் அழிந்தனவே

இத்தனை உயிர்கள் உன்பசிக்கு வேண்டுமோ? அன்னை
தீர்ந்ததா உன்பசி, தொலைந்ததா உன் கொலை வெறி

பொங்கியெழுந்த நீயோ நிம்மதியாய் உறங்குகிறாயே.
உறவுகளைப் பிரிந்த நாமோ நித்திரையின்றி அலைகிறோமே

த.சுலக்ஷன்,
தரம் – 9, யா/ஹாட்லிக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகங்களால் என்ன பயன்?.

இளம் பிள்ளைகளுக்கு பதினைந்து பதினாறு வயதுவரை மூளை வேகமாக வளர்ச்சி அடைகிறது. மனிதனது வாழ் நாளில் வேறு எந்தப் பருவத்திலும் மூளை இவ்வளவு விரைவாக வளர்ச்சி அடைவதில்லையாம். இக்கால கட்டத்தில் பிள்ளைகளுக்கு அறிவுப் பசியும் நிறைய ஏற்படுகிறது. அந்தப் பசிக்கு நல்ல தீனி போட்டு பிள்ளைகளது அறிவை வளர்க்க வேண்டியது பெற்றோரதும் ஆசிரியர்களதும் கடமையாகும். மூளை மட்டும் வளர்ந்தால் போதாது அவர்களது மனமும் வளர்க்கப்பட வேண்டும்.

குழந்தைகளுக்கு இயல்பாகவே கலை உள்ளம் அமைந்திருக்கிறது. கதை, பாட்டு, நடனம், நாடகம் போன்றவற்றின் மூலம் போதிக்கப்படுகின்ற விடயங்களை அவர்கள் விரும்பிக் கற்பர். அதிலும் நாடகத்தின் மூலம் சொல்லப்படும் விடயம் பசுமரத்தாணி போல குழந்தைகளது உள்ளத்தில் பதிந்துவிடும். மகாத்மாகாந்தி கூட சிறுபிள்ளையாக இருக்கும் பொழுது, அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து சத்தியத்தின் பெருமையை அறிந்து கொண்டவர்தான்.

நல்ல நாடகங்களைப் பார்த்து ரசிப்பதன் மூலமும் பிள்ளைகள் கல்வி கற்கலாம். தாங்களே நாடகத்தில் பங்கெடுத்து நடிப்பதன் மூலமும் கல்வி கற்கலாம். இவற்றில் பின்னையதே சிறந்தது. நாடகத்தில் தாமும் ஒரு பாத்திரம் தாங்கி நடிக்கும் பொழுது அவர்கள் விளையாட்டாகவும் கூடிய ஆர்வத்துடனும் கல்வி கற்கின்றனர். பிள்ளைகளுக்கு ஆடவும் பாடவும் நல்ல விருப்பம். பெரியவர்களை பார்த்து தாமும் அவர்களைப் போல நடந்து கொள்ளவும் விரும்புகின்றனர். இயல்பாகவே அமைந்துவிட்ட இந்த விருப்பங்களைப் பயன்படுத்தி அவர்களை நாடகங்களில் நடிக்க வைத்தால், அவர்களது உடலும் மூளையும் மனமும் நல்ல முறையில் வளர்ச்சியடையும்.

சிறுவர்களை நாடகங்களில் பங்கேற்று நடிக்கச் செய்வதிலும், அவற்றைப் பார்க்கச் செய்வதிலும் முக்கிய நோக்கம் அவர்களை மகிழ்விப்பதே ஆகும். அதற்கும் மேலாகப் பல நன்மைகளை நாடகம் செய்கின்றது. பிள்ளைகளது கவனம் அதிகரிக்கின்றது.அவர்கள் மற்றவர்களைப் பார்த்துக் கருமங்களைச் செய்ய பழகுகின்றனர்.



நாடகத்துடன் சேர்த்துப் பல விடயங்களையும் அறிந்து கொள்கின்றனர். வாசிக்கும் பழக்கம் பெருகுகின்றது. இவை எல்லாம் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

நடிப்பு ஒரு தனிக்கலை. அது இயல்பாகவே அமையப்பெறாதவர்களும் பயிற்சியால் அதை ஓரளவு பெறலாம். நடிப்புடன் சேர்ந்து வேறு பல திறமைகளும் வளர்ச்சியடைகின்றன. கிரகிப்பு, கற்பனை, உணர்ச்சி வெளிப்பாடு, சாதுரியமான உரையாடல், தெளிவான பேச்சு, மொழியாட்சி, கூச்சமின்மை, துணிவு, தன்னம்பிக்கை, மேடைப்பேச்சு இன்னும் இப்படிப் பல. பாட்டு, அபிநயம், உடற்பயிற்சி ஆகியவற்றையும் இவற்றுடன் சேர்த்துக்கொள்ளலாம்.

நகைச்சுவை உணர்வு (Sense of Humour) ஒரு அருமையான உணர்வு. அந்த உணர்வு உடையவர்கள் பாக்கிசாலிகள்! அவர்களால் துன்பத்திலும் இன்பம் காணமுடியும். மற்றவர்களது முரண்பாடுகளையும் அவர்கள் விடும் பிழைகளையும் கண்டு சிரிப்பது போலவே, எங்களது குறைபாடுகளையும் பிழைகளையும் சுயவிமர்சனக் கண் கொண்டு பார்த்து ஏங்களால் சிரிக்க முடியுமானால், இன்பமே எந்நாளும் துன்பமில்லை!

இளம் பிள்ளைகளுக்கு இயற்கையாகவே நல்ல நகைச்சுவை உணர்வு உண்டு. அவர்களது சிரிப்பு கள்ளம் இல்லா வெள்ளைச் சிரிப்பு. அவர்கள் எதையும் முழுக்கவனத்துடன் பார்த்து, அதனுடன் ஒன்றித்து நின்று, வெட்கமோ வீண் பெருமையோ பார்க்காது வாய்விட்டுச் சிரித்து மகிழ்கின்றனர். சத்துணவை இனிப்புடன் கலந்து கொடுப்பது போல, நல்ல கருத்துகள் மூலம், உணர்வு, அறிவு, பண்பு ஆகியவற்றை வளர்க்கலாம். நகைச்சுவையுடன் நாடகத்தை எழுதுவது மட்டுமன்றி, அதை நயம்பட நடிப்பதும் ஒரு தனி கலை. அத்தகைய நாடகங்களை நடிக்கவும் ரசிக்கவும் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

நன்றி,

**"நவீன இலக்கியங்களைக் கற்பித்தல்"**

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

சிறுகதை

சொருபினி.மு
3ம் வருடம் முகாமைத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

சூரியன் தவணை முறையில் தனது ஒளியை பூமிக்கு பரப்பி இருட்டை விரட்டிக கொண்டிருந்தான். மாசிமாதப் பனி மூசிப்பெய்து கொண்டிருந்தது. பிள்ளையார் கோவில் மணி நேரம் ஆறாகிவிட்டதனை அறிவித்தது.

காவேரி சடாரென்று விழித்துக்கொண்டாள். அவசரத்தில் கடவுளை வணங்ககூட அவளிற்கு நேரம் கிடைக்கவில்லை. கடமைக்கு பிறகுதானே கடவுள். அவளை கடமை விரட்டியது. எழு மணி பேருந்திற்கு மகள் மயூரியை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். அதற்குள்ளே ஏதாவது சமைத்தாக வேண்டுமே! மகளை எழுப்பி குளிக்க அனுப்புவதற்குள் காவேரிக்கு தலை சுற்றியது. அவள் மனது மௌனமாய் இருப்பினும் உடல் அடிக்கடி அவளிற்கு வயது நாற்பது கடந்ததை அறிவித்துக்கொண்ருந்தது.

சமையலறைக்குள் புகுந்த காவேரிக்கு விரைவாக தயாரிக்கக்கூடிய உணவெதுவும் தென்படவில்லை. கடைக்கு சென்று 'பணிஸ்' வாங்கி வந்தாள். அடுப்பில் வைத்த பாலைக்கூட காய்ச்சவிடாமல் மகள் அடிக்கடி "அம்மா என்ர ரையை காணேல்ல", 'அம்மா என்ர சயன்ஸ் கொப்பி எங்கே?' என்று தனது வழமையான பல்லவியை பாடிக்கொண்டிருந்தாள்.
காவேரிக்கு கோபம் வந்தது. சாதாரண தரம் படிக்கின்ற மயூரி இன்னும் கூட சிறுபிள்ளைத்தனமாகவே நடந்து கொண்ருந்தாள். காவேரியின் வளர்ப்பிலும் சிறி பிழையிருக்கவே செய்தது. தந்தை வெளிநாடு. ஒரேயொரு பெண்பிள்ளை என்பதனால் கொஞ்சம் அதிகமாகவே செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டாள். இன்று கண்டிக்கவும் முடியாமல்... அமைதியாக இருக்கவும் முடியாமல்... காவேரி இருதலைக் கொள்ளி எறும்பாக தத்தளித்துக்கொண்டிருந்தாள்.

'அம்மா பத்து நிமிஷம்தான் இருக்கு. சாப்பாட்டை தாங்கோ" ஹாலில் மகள் இரண்டு காலில் பறந்துகொண்டிருந்தாள்.

காவேரி பணிசையும், ரீயையும் மகளிடம் கொணர்ந்தாள். மயூரிக்கு பணிஸ் பிடிக்காது. அடுத்த சில நிமிடங்ள் அங்கே ஓர் மினி சூறாவளி. ரீயை மட்டும் குடித்துவிட்டு மகள் போய்விட்டாள். போனது மட்டுமல்ல, தாய் தன்னை பட்டினி போடுவதாக குற்றம் சாட்டினாள். தனக்கு சமைப்பதனை விட என்ன வேலை என கேள்வி கேட்டாள். "அப்பாவிடம் சொல்வேன்" என்றாள். காவேரி கெஞ்சிப் பார்த்தாள். மகள் கேட்கவில்லை. தாங்காத தாய்மனம் கண்ணீருடன் திரும்பியது.

மயூரியால் அன்று பாடங்களை சரியாக கவனிக்க முடியவில்லை. பசி ஒரு புறம். குற்ற உணர்வு ஒரு புறம் அவளை விரட்டியது. பாடசாலை விட்டதும் முதல் பேருந்தில் ஏறி ஜன்னல் ஓரமாய் அமர்ந்தாள்.

பேருந்து பிரதான பேருந்து நிலையத்தில் சிறிது நேரம் தரித்து நின்றது. மயூரியின் கண்களும் பேருந்து நிலையத்தின் ஓரமாய் தரித்து நின்றன. அங்கே ஓர் இளம்தாய் தனது இரண்டு குழந்தைகளிற்கும் பாண் ஊட்டிக் கொண்ருந்தாள். அருகே ஓர் குட்டி நாய் அடிக்கடி அவளிடம் பங்கு கேட்டுக்கொண்ருந்தது. பசியால் மெலிந்த அந்த உருவங்கள் மயூரிக்கு எத்தனையோ பாடங்களை புகட்டியது.

மயூரி அழத்தொடங்கினாள். அழுதாள் அழுததாள் வீடு வரும் வரை அழுதாள்.......... அம்மாவை கட்டிக்கொள்ளும் வரை அழுதாள்........... அம்மாவிடம் மன்னிப்பு கேட்கும் வரை அழுதாள். தாய் மடியில் வீழ்ந்த ஒவ்வொரு துளி கண்ணீரும் மயூரி இதே போன்று இனியொரு தவறு செய்யமாட்டாள் என்பதனை சத்தியம் செய்து கொண்டிருந்தன.

## சிரிப்பு வருது

மகன் : அப்பா இன்டைக்கு ஸ்கூல்லே "யப்பான் எங்க இருக்கு?" எனக் கேட்டாங்கப்பா

அப்பா : அடடே, நான் ஸ்கூல்லே படிக்கும் போதும் அதே கேள்வியத்தான் கேட்டாங்க அப்ப இன்னும் யப்பானைக் கண்டு பிடிக்கலயா?.

பா.சிவபானுசுதசர்மா,
தரம் - 8E, யா/இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகளை சாதனைகளாக்குவோமா?.

**இந்த யோசனைகள் 2008 ஆம் ஆண்டு தமிழகத்தில் தரம் 10 க்கான பரீட்சையில் மாநில மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்கள் பின்பற்றிய வழிமுறைகள். நீங்களும் முயற்சி செய்யுங்கள்.**

- இலக்கு நிர்ணயித்துப் படியுங்கள். இதனை வருட ஆரம்பத்தில்லேயே மேற்கொள்ளுங்கள்
- அன்றைய பாடங்களை அன்றே படியுங்கள்.
- மாலையில் புதிய பாடங்களைப் படியுங்கள். காலையில் அவற்றினை மீட்டுப் பாருங்கள்.
- வகுப்பில் வைக்கப்படும் சிறு தேர்வுகளையும் கவனமாக எழுதுங்கள். இதனால் இறுதித் தேர்வில் மன அழுத்தம் (Tension) இருக்காது.
- தினமும் படிப்பை ஆரம்பிக்க முன் தியானம், பிரார்த்தனை போன்றவற்றில் ஈடுபடுங்கள்.
- ஓய்விற்காக விளையாட்டுக்களில் ஈடுபடுங்கள்.
- இரவில் நன்றாகத் தூங்குங்கள். நீண்ட நேரம் படிக்காதீர்கள்.
- குடும்ப நிலைமையை உணாந்து கொள்ளுங்கள். அதனை மாற்ற வேண்டு மென்று படியுங்கள்.
- படித்தவற்றை தெளிவாகவும், அழகாகவும் அக்கறையுடன் எழுதுங்கள்.
- பழைய வினாத்தாள்களுக்கு விடை எழுதிப் பாருங்கள்.
- கால அட்டவணை தயார் செய்து படியுங்கள்.
- சந்தேகங்களை உடனுக்குடன் கூச்சப் படாமல் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
- குழுவாக இணைந்து படியுங்கள்.
- அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களைப் படியுங்கள்.
- படித்ததை அப்படியே மனத்திலே கொண்டு வந்து நிறுத்துங்கள்.
- கேள்விகளுக்கான விடைகளை மனத்திலே சொல்லிப் பாருங்கள்.
- உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள்.

**வெற்றி மேல் வெற்றி பெறுவீர்!**

**- விக்கிரமன்**

# அன்புக்கட்டளைகள்

- கடவுளின் பேராற்றல் மெல்லிய பூங்காற்றில் இருக்கிறது. புயற்காற்றில் அல்ல.
- பிறர் குற்றங்களைக் கண்டு தண்டிக்கும் முன் உன்னிடமுள்ள பாரிய குற்றங்களைக் காண்.
- தாயைப் பார்த்து பெண்ணெடு, தரத்தைப் பார்த்து முதலிடு, நிலத்தைப் பார்த்து பயிரிடு.
- உன்னிடத்தில் வேலை பார்த்தவனின் வியர்வை உலர்வதற்கு முன் அவன் கூலியைக்கொடு.
- சாவில் பல ஒன்றாகும் வாழ்வில் ஒன்று பலவாகும்.
- தினமும் நாம் செய்யும் வேலைதான் நமக்கு உற்ற தோழன்.
- பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும், தீமையாவது செய்யாதிரு.
- சுகத்தைக் கண்டு மகிழாதே. அது துக்கத்தின் ஒரு அலங்காரம். துன்பங்களை உன்னிடத்தில் குடிவைக்காதே. அது உன்னை இறுதியில் அழித்து விடும்.
- கோவப்பாம்பு குழலுக்கு அடங்கும். கொதிக்கும் நெஞ்சை குளிர்மொழி அணைக்கும்.
- கடனோடு காலையில் எழுவதை விட பட்டினியோடு இரவில் படுப்பது மேல்.
- முடர்களின் நட்பில் உயிர்வாழ்வதை விட விவேகிகளின் பகைமையில் வாழ்வதே மேல்.
- உன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள். என்பது முக்கியமில்லை, நீ எப்படி இருக்கிறாய் என்பதே முக்கியம்.

**S.சிவமதி, தரம் - 9**
**யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களுக்கு வர்ணம் தீட்டுவோமா?.



வ.சாயிருக்ஷன், தரம் - 6,
யா/கோப்பாய் தமிழ் நாவலர் வித்.



சே.புஸ்பதீபன், தரம் - 8,
யா/நடேஸ்வராக் கல்லூரி



ம.லிபியா, தரம் - 11,
யா/நடேஸ்வராக் கல்லூரி



தனுசன், தரம் - 4,
யா/குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இன்றைய உலகம்" பொது அறிவு வினா - விடைத் தொகுப்பு நூலின் (2008) பொது அறிவுப் போட்டி வினாக்களும் விடைகளும்.

1. இலங்கையில் 1954- 1962 காலப்பகுதியில் மகாதேசாதிபதியாக இருந்தவர் யார்?.
   சேர் ஒலிவர் குணத்திலக்க
2. இலங்கையில் தற்போது அமைக்கப்படும் விமான நிலையம் எது?. வீரவில (அம்பாந்தோட்டை)
3. 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நகரம் எது?. இலண்டன்
4. 2008 ஆம் ஆண்டில் 8 தங்கம் வென்ற அமெரிக்க ஒலிம்பிக் வீரர் யார்?. மைக்கல் பெல்ப்ஸ்
5. 20008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 100 பதக்கங்கள் பெற்ற நாடு எது?. சீனா
6. ஆஸ்கார் விருது எத்துறையினருக்கு வழங்கப்படும் மதிப்பு மிக்க பரிசாகும்?. சினிமாத்துறை
7. 'கமநெகும' கிராம அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம் எது?. மொனராகல
8. நேபாளம் நாட்டின் முதலாவது ஜனாதிபதி யார்?. ராம்பரன் யாதவ்
9. உலகில் தற்போது பெண் ஜனாதிபதி காணப்படும் நாடு ஒன்று தருக. இந்தியா/ ஆர்ஜென்டினா
10. இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி யார்?.
    ஜே.ஆர்.ஜெயவர்த்தன

## "இன்றைய உலகம்" பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்

(1) முதலாம் இடம் : த.கிரிசாந், தரம் - 10, யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

(2) இரண்டாம் இடம் : T.கஜேந்திரன், தரம் - 10, யா/ காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி.

(3) மூன்றாம் இடம் : வி.கல்பனா, தரம் 7C, யா/ இந்து மகளிர் கல்லூரி.

(இவர்களுக்கான பணப்பரிசு பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும். பரிசு கிடைக்காத மாணவர்கள் தமது முகவரியை குறிப்பிட்டு கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டும்.)

## சரியான விடைகளை எழுதிய ஏனைய மாணவர் விபரம் (2008 இல் பயின்ற தரமும் பிரிவும் தரப்படுகிறது)

| மாணவர் பெயர் | தரம் | பாடசாலை |
|---|---|---|
| (1) இ.சஞ்ஜீவன் | 4-I | யா/ஏழாலை சன்மார்க்க வித்தியாலயம் |
| (2) சி.டயந்தன் | 7 | யா/ அத்தியாய இந்துக் கல்லூரி |
| (3) வ.றொபின்சன் | 11 | யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி |
| (4) மு.நவரத்தினகஜன் | 8D | யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் |
| (5) ச.மைத்திரேயன் சர்மா | 5E | யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் |
| (6) ர.மதுராந்தன் | 9 | யா/ யாழ் இந்துக் கல்லூரி |
| (7) தெ.சுகுணன் | A/L 2010 | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |
| (8) அ.யதுசன் | 4I | யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம் |
| (9) நே.யுவேந்திரா | 5A | யா/ கொக்குவில் இந்து ஆரம் பாடசாலை |
| (10) க.நந்தகோபன் | A/L 210 | யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் |
| (11) ஜெ.கஜித் | 10 | யா/ காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி |
| (12) ர.அனுஷா | A/L 2010 | யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாணவர் பெயர் | தரம் | பாடசாலை |
|---|---|---|
| (13) ம.அஜந்தா | 10 | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| (14) வி.கிருத்திகா | 10A | யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| (15) ஐ.தனுஜா | A/L2010 | யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி |
| (16) நா.டினோஜா | 6E | யா/ வேம்படி மகளிர் கல்லூரி |
| (17) செ.தினோஜி | 10B | யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் |
| (18) ஆ.சுபாஜினி | 11 | யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை |
| (19) தி.நர்மதா | 8F | யா/ வேம்படி மகளிர் கல்லூரி |
| (20) செ.தர்சிகா | A/L2010 | யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி |
| (21) சி.கோபினா | 9 | யா/ உடும்பிராய் இந்துக் கல்லூரி |
| (22) கு.தீபாகா | 9E | யா/ சாவகச்சேரி இந்முக் கல்லூரி |
| (23) ச.சாலினி | 10 | யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை |
| (24) இ.ஜதீபா | A/L2010 | யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி |
| (25) ம.நிருஷா | A/L2010 | யா/ தெல்லிப்பழை யூனியன் கலலூரி |
| (26) க.நவநிதி | 8 | யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் |
| (27) இ.அனுஜா | 13D | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |
| (28) க.சபிதா | 8 | யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் |
| (29) பி.ஹாரனி | 6B | யா/ வேம்படி மகளிர் கல்லூரி |
| (30) நீ.தர்மினி | 5B | யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை |
| (31) யோ.சுலோஜனா | 5B | யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை |
| (32) நி.சரண்யா | 7 | யா/ வேம்படி மகளிர் கல்லூரி |
| (33) சி.கயந்தி | 10A | யா/ அத்தியாயர் இந்துக் கல்லூரி |
| (34) செ.ருபிகா | 8 | யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் |
| (35) உ.டிலானி | 11 | யா/ கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் |
| (36) நா.பரீனா | 9B | யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் |
| (37) செ.தேனுகா | 9E | யா/ வேம்படி மகளிர் கல்லூரி |

## சிரிப்பு வருது

நோயாளி : டாக்டர் நான் இந்த நிமிஷம்" பேசறது அடுத்த நிமிஷம் மறந்து போகுது அதுக்கு என்ன செய்ய.....
டாக்டர் : எத்தனை நாளா இந்த நிலை?.
நோயாளி : எந்த நிலை
டாக்டர் : ? ? ? ?

பா.சிவபானுசுதசர்மா,
தரம் - 8E, யா/இந்துக்கல்லூரி

**உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தின் அதிபராக பணியாற்றி 09.03.2009 ல் ஓய்வு பெற்றுள்ள கண்மணியின் ஆலோசகர் திரு.க.ஆனந்தராஜா அவர்களுக்கு கண்மணியின் வாழ்த்துக்கள்!**

**வாசகர்கள் தங்கள் ஆக்கங்களையும் ஆலோசனைகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி**
இரா.ஜெயக்குமார், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org